பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

எழிலுறு காட்சிகளுடன் அழகுற படம் பிடித்திட... அஜந்தா கலைப் பூங்கா 63, சங்கிலியன் வீதி, நல்லூர்

# உதயன்

விலை ரூபா 5-00

எழிலுறு காட்சிகளுடன் அழகுற படம் பிடித்திட.... அஜந்தா கலைப் பூங்கா 63, சங்கிலியன் வீதி, நல்லூர்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 23 செவ்வாய்க்கிழமை (06 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 191

# வன்னியில் பெரும் படை நடவடிக்கை மேற்கொள்ள அரச படைகள் முஸ்தீபு!

## ஆயிரக் கணக்கில் துருப்புகள் வவுனியா நகரை அண்டி குவிப்பு

— ஓமந்தையிலிருந்து உதயன் செய்தியாளர் —

ஓமந்தை, ஜூன் 6

வன்னிப் பகுதியில் பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் திட்டத்தில் பல்லாயிரக்கணக்கான துருப்புகளை வவுனியாவை அண்டிய பகுதிகளில் ஸ்ரீலங்கா அரசு குவித்து வருவதாக வவுனியாவிலிருந்து ஓமந்தைக்கு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இராணுவத்தினரைக் குடிப் பதற்கு வசதியாக —

வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், காமினி வித்தியாலயம் மற்றும் மதவாச்சி — ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள நான்கு தமிழ்ப் பாடசாலைகளை தற்காலிகமாக சில தினங்கள் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

வடபகுதிக்கு வரமுடியாத நிலையில் வவுனியாவில் தரித்து நின்ற பல லொறிகளும், வடக்கே உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்காக அரச அதிபரின் அனுமதியுடன் வவுனியாப் பகுதிக்குச் சென்ற பல லொறிகளும் இராணுவத் தேவைக்கென எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

### ஆஸ்பத்திரிகளில் ஆயத்தம்

அநுராதபுரம், மதவாச்சி ஆகிய பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகள் இராணுவத்தினரின் அவசரத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக மாற்றம் செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உடப்பில் தேடுதல்

கொழும்பு, ஜூன். 6

புத்தளம் மாவட்டம் உடப்பு பகுதியை கடந்த சனி அதிகாலை பொலிஸார் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

தேடுதலின் போது 15 தமிழர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு, பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காலியில் மீண்டும் வன்முறை வீடுகள் தீக்கிரை! சிறுமி பலி!!

### நால்வர் படுகாயம்

கொழும்பு, ஜூன் 6

காலிப் பகுதியில் தமிழர்களுக்கு எதிரான இன வன்செயல்கள் மீண்டும் வெடித்தன.

இந்த வன்செயல்களின் போது தமிழ்த் தோட்டத் தொழிலாளருக்குச் சொந்தமான எட்டு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன, சிங்கள காடையர் குழுவினரால் தமிழ்ச் சிறுமி ஒருத்தி வெட்டிக் கொலை செய்யப்பட்டாள். காடையரின் தாக்குதலில் நான்கு அப்பாவித் தமிழர்கள் படுகாயமுற்றனர்.

காலிப் பகுதியில் கடந்த வெள்ளியன்று நள்ளிரவு இடம்பெற்ற இன வன்செயல்களை அடுத்து அங்கு கால வரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது தெரிந்ததே.

அந்த ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட சமயமே — நேற்று முன்தினம் இரவு — மீண்டும் வன்செயல்கள் வெடித்தன.

இதனையடுத்து அங்கு மீண்டும் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

காலி மாவட்டம் எல்பிட்டி தோட்டப் பகுதியில் தமிழ்த் தொழிலாளர்கள் வசித்து வரும் நாகஹதென்ன லயன்களுக்குள் திடீரெனப் பிரவேசித்த காடையர் குழு அந்த லயன் அறைகளைத் தீயிட்டுக் கொளுத்தியதுடன், அங்கிருந்த தமிழ்த் தொழிலாளர்களையும் கொடூரமாகத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

காடையர் கூட்டத்திடம் சிக்கிய எட்டு வயது அப்பாவிச் சிறுமி ஒருத்தி வெட்டிக் கொலை செய்யப்பட்டாள்.

### ஊர்காவற்றுறை தாக்குதலில் சிப்பாய் பலி

கொழும்பு, ஜூன். 6

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஊர்காவற்றுறையில் படையினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

தேடி அழிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

(ஐ-6)

## தந்திரிமலை மினி முகாம் அழிப்பு! ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்!!

யாழ்ப்பாணம், ஜூன் 6

வவுனியாவில் தந்திரி மலைப் பகுதியில் இருந்த ஸ்ரீலங்கா இராணுவ மினி முகாம் கடந்த சனிக்கிழமை இரவு விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாகத் தாக்கி கைப்பற்றப்பட்டது. பின்னர் முகாம் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது.

தந்திரிமலை பிரதான இராணுவ முகாமுக்கு அருகே சுமார் 75 படையினரைக் கொண்ட இந்த மினி முகாம் அமைந்திருந்தது.

விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பித்த உடனேயே படையினர் முகாமை விட்டு தப்பி ஓடினர்.

10 நிமிட நேரம் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மாணவர்கள் தமது பொறுப்புகளை முழுதாக உணர்ந்து செயற்படுக!

### எழுச்சி நாள் அறிக்கையில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 6

மாணவர்கள் தங்கள் பொறுப்புக்களை முழுமையாக உணர்ந்து மற்றவர்களுக்கும் உணர்த்தும் நாளாக மாணவர் எழுச்சி நாளை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இன்று அனுஷ்டிக்கப்படும் மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் ந. இன்பன் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

இந்த எழுச்சி நாளில் மாணவர் தம்மைத் தாம் மீண்டும் ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டும்: தம்தேசத்தை, தாம் வாழும் சூழலை, தம் பள்ளியை, தாம் கற்கும் கல்வியை எண்ணத் தராசிலிட்டு நிறுத்துப்பார்க்கவேண்டும். அப்போதுதான் எவை எவை சரியென்பதும், எவ்வெவற்றிலிருந்து நாம் விடுபட வேண்டும் என்பதும், எதையெதைக் கைக்கொள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் இன்று மாணவர் பேரணி

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டிய பிரமாண்டமான பேரணி இன்று யாழ். நகரில் நடைபெறவுள்ளது.

மாணவர் எழுச்சி நாளை இன்று சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மாணவர்களுடன் இணைந்து விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் செய்துள்ளனர்.

எழுச்சி நாளை ஒட்டிய பேரணி இன்று பிற்பகல் 1-30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி பழைய பூங்கா வீதி, பலாலி வீதி வழியாக யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மைதானத்தைச் சென்றடையும்.

மாணவர்களின் உரிமைகள், அவர்களது இன்றைய நிலை. மாணவருக்கு எதிரான ஸ்ரீலங்கா அரசின் கொடுமைகள் என்பனவற்றைச் சித்திரிக்கும் கலைவடிவங்கள் இன்றைய பேரணியில் இடம்பெறவுள்ளன.

கோட்ட ரீதியாக மாணவர்கள் ஒன்றுகூடி இன்றைய பேரணியில் கலந்து கொள்ள உள்ளனர்.

(ஐ)

## சீ-டான்ஸர் தகர்ப்பை அடுத்து

# செஞ்சிலுவைக் குழுவின் சேவை மறுபரிசீலனை!

யாழ்ப்பாணம், ஜூன் 6

எண்ணூறு தொன் நிறையுடைய 'சீ-டான்ஸர்' கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்திற்குள் நுழையும் சமயம் கடற்கண்ணி வெடியில் சிக்கியதை அடுத்து —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வடக்கில் மேற்கொள்ளும் பணிகள் குறித்து முன்னுக்குப் பின் முரணான செய்திகள் வெளியாகின.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வடக்கிற்கான தனது கப்பல் போக்குவரத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பதாக சங்கத்தின் கள இணைப்பதிகாரி டொமினிக் ஹென்றி தெரிவித்ததாக ஏ.எவ்.பி. செய்தி ஒன்று குறிப்பிட்டது.

இச்செய்தியை மேற்கோள் காட்டி பல செய்தி நிறுவனங்கள் வடக்கிற்கான கப்பல் போக்குவரத்தை செஞ்சிலுவைக் குழு நிறுத்திவிட்டதாக அறிவித்தன.

இந்த விடயம் குறித்து ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் தலைமையகத்துடன் கொழும்பு அலுவலகப் பிரதிநிதிகள் விரிவாக ஆலோசனை நடத்தி வருவதாகவும்—

இரண்டொரு தினங்களில் தமது குழு இது குறித்து தீர்க்கமான முடிவு எடுக்கும் எனவும் —

டொமினிக் ஹென்றி கூறியதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பிரதிநிதிகளின் பிரதித் தலைவர் போல் ஸ்குரு நேற்று கொழும்பில் விடுத்த அறிக்கையில் —

வடக்கில் தமது பணிகளை இடைநிறுத்துவதற்கான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

நிலைமை மறுபரிசீலனை செய்யப்படுவதாகவும்—

எனினும் வடக்கிற்கான தமது கப்பல் சேவைகளின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் தாங்கள் பேச்சு நடத்த வேண்டியிருக்கும் என்றும்—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சீ-டான்ஸர் மூழ்குகிறது!

கண்ணிவெடியில் சிக்கி சேதமுற்ற நிலையில் காங்கேசன் துறைமுகத்துக்கு வெளியே கடலில் தரித்து நிற்கும் "சீ - டான்ஸர்" கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக கடலில் மூழ்கி வருவதாக நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் மீட்கமுடியாத அளவு சேதமுற்றிருப்பதாகவும் —

அதனை மீட்டுக் காப்பாற்றுவது இயலாத காரியமாக இருக்கும் என்றும் —

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

## காணமற்போன மாலுமி உயிரிழந்துவிட்டார்?

காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் "சீ - டான்ஸர்" கப்பல் கடற்கண்ணிவெடியில் சிக்கியபோது காணாமற்போனதாகக் கூறப்படும் இந்தோனேஷிய மாலுமி உயிரிழந்திருக்கலாம் என தற்போது கருதப்படுகின்றது.

இவர் மீட்கப்பட்டதாகவோ அல்லது இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவோ நேற்று மாலை வரை செய்தி ஏதும் கிடைக்கவில்லை.

இதேசமயம் கப்பல் கண்ணிவெடியில் சிக்கிய சம்பவத்தில் காயமுற்ற — இந்தோனேஷிய நாட்டு — மாலுமிகள் மூவரும் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகவும் —

மீட்கப்பட்ட ஏனையோர் காங்கேசன்துறையில் தங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

## யாழ். பெண்ணின் பையில் வெடிக்க வைக்கும் கருவி!

### வவுனியாவில் கைப்பற்றப்பட்டதாம்

கொழும்பு, ஜூன் 6

கடந்த வெள்ளியன்று வடபகுதியில் இருந்து தாண்டிக்குளம் ஊடாக கொழும்பு வந்த நடுத்தர வயதுப் பெண் ஒருவரிடம் இருந்து குண்டுகளை வெடிக்கவைக்கும் [டிட்டனேற்றர்] சாதனம் கண்டுபிடிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வவுனியா ரயில் நிலையத்தில் பயணிகளின் பொதிகளை படையினர் சோதனையிட்டபோது பிரஸ்தாப பெண்ணின் பயணப் பையின் கீழ்ப் பகுதியில் இப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாம்.

"ரெஜிபோம்" ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த வெடிக்க வைக்கும் சாதனம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட இருந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனை மறைத்து எடுத்துவந்ததாகக் கருதப்படும்

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## இரு தரப்பினரிடமும் பாதுகாப்புக்கு உறுதி கோருகின்றது செஞ்சிலுவை

யாழ்ப்பாணம், ஜூன் 6

வடக்கிற்கான தனது கப்பல் சேவையைத் தொடர்ந்து நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் — அரசாங்கம் ஆகிய இருதரப்பினரிடம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு உறுதி கோரியிருப்பதாக செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன.

இந்த விடயம் குறித்து செஞ்சிலுவை அதிகாரிகள் நேற்று கொழும்பில் அரசின் உயரதிகாரிகளுடனும், யாழ்ப்பாணத்தில் புலிகளின் பிரமுகர்களுடனும் ஏக காலத்தில் பேச்சு நடத்தியதாகத் தெரியவருகின்றது.

கப்பல் போக்குவரத்துக்கு பாதுகாப்பு உறுதி வழங்கிய விடுதலைப் புலிகள், படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் காங்கேசன்துறை துறைமுகத்துக்குள் கப்பலுக்கு தாங்கள் பாதுகாப்பு உறுதி தர முடியாது என்றும்—

துறைமுகத்துக்குள் நடக்கும் சம்பவங்களுக்கு தாம் ஒன்றும் செய்ய முடியாது என்றும் —

செஞ்சிலுவை அதிகாரியிடம் தெரிவித்ததாக அறிய வந்தது.

செஞ்சிலுவைச்சங்க கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்து புலிகளுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விவரத்தை செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதி தமது தலைமைப் பீடத்துக்கு [illegible] தாகவும் அறியவந்தது.

## காங்கேசனுக்குச் செல்ல "கல்யாணி" பின்னடிப்பு!

நேற்று முன்தினம் பிற்பகல் "சீ- டான்ஸர்" கப்பல் கண்ணி வெடியில் சிக்கியதை அடுத்து, அச்சமயம் பருத்தித்துறையில் தரித்து நின்ற "லங்கா கல்யாணி" கப்பல் நேற்று முன்தினம் இரவு காங்கேசன்துறைக்குச் செல்லவில்லை.

வழக்கமாக பருத்தித்துறையில் தரித்துநின்று பொருள்களை இறக்கும் பிரதேசத்திலிருந்து சற்றுத் தள்ளி ஆழ் கடலில் அது நேற்று முன்தினம் இரவு தரித்து நின்றது.

பின்னர் நேற்றுக் காலை அது பருத்தித்துறை கடற் பிரதேசத்துக்கு வந்து பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டது.

[illegible] றசென்ற இக்கப்பல் துறைமுகத்தில் இருந்து 5 மைல்களுக்கு அப்பால் ஆழ்கடலில் [illegible] பட்டது. (உ-3)

## தமிழீழ வைப்பகம் கிளிநொச்சியில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

தமிழீழ வைப்பகத்தின் இரண்டாவது நிலையம் கிளிநொச்சியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழா நண்பகல் 12.30 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெற்றது.

தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் வைப்பகத்தை திறந்து வைத்தார். வைப்பகத்தின் பெயர்ப் பலகையை நிதர்சனம் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் திரைநீக்கம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**WANTED**

English speaking retired gentleman is needed to handle the Counter Sales and Supervision of a small industry Salary negotiable. Own hand written application (should reach before 12th June 1995. Advertiser No: 797, C/o Uthayan, Jaffna. [86936]

**மணப்பெண்கள் தேவை**

பொருளாதார வசதி உள்ளவர்களான அரசாங்க சேவை, 44 வயது, செவ்வாய் 32 ரேவதிக்கும், ஆசிரியர் 33 வயது. புனர் பூசத்திற்கும், வங்கி உதவி மனேச்சர் 32 வயது அவிட்டத்திற்கும், யாழ். கம்பனி 31 வயது ரேவதிக்கும், வியாபாரம் 31 வயது மிருகசீரிடத்திற்கும் படித்த பெண்கள் தேவை. தொடர்பு: த. இராமநாதன், புஸ்பநாதன் வீதி, இணுவில். [8429]

**கணக்கியல்**

உயர்தரக் கணக்கியல் பகுதி II திருத்திய இரண்டாம் பதிப்பு வெளியீடு: புனித மிக்கேல் கல்லூரி மட்டக்களப்பு ஆக்கம்: வீ. சுந்தரேஸ்வரன் [B Com MAAT] விற்பனையாகிறது. பூபாலசிங்கம், புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1436)

## நியமன கடிதம்

தென்மராட்சி, ஜூன் 6

புதிய ஆசிரியர் சேவைத் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்விக் கோட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் இவ்வாரம் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (ஐ-117)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**பட்டப்பின் படிப்பிற்குப் பதிவு செய்தல்**

**1995**

கலாநிதி. (முதுமெய்யியல்மாணி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1994/1995 ம் கல்வியாண்டில் பின்வரும் பாடநெறிகட்கு, பட்டப்பின் படிப்பிற்கான தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், கல்வியியல், புவியியல், இந்து நாகரிகம், அரசியல், கிறிஸ்தவநாகரிகம், வரலாறு, வர்த்தகம், தமிழ், மெய்யியல், சமஸ்கிருதம், மொழியியல், நுண்கலை நாடகமும் அரங்கியலும், முகாமைத்துவம்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்களை நேரில் பெற விரும்புவோர், நிதிக்கிளையில் ரூபா 20/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக் கிளை, உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூல விரும்புவோர் ...ம் பெற யாழ். ...நிதியாளர் என்ற ... பல்கலைக்கழகம் பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 20/- இற்கான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளையுடன் ரூபா 10 50 பெறுமதியுள்ள முத்திரை ஒட்டிச் சுய விலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1995-06-30 ஆம் திகதிக்கு முன்பாக உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். 1995-06-30 ஆம் திகதிக்குப் பின்கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

– பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.

[சி-1299]

## தொழிற் பயிற்சிகள்

வடமராட்சி மாணவர்கள் வசதியை முன்னிட்டு

**எமது கிளை நிறுவனத்தில்**

எங்கும் இலகுவாக தொழில் வாய்ப்பு பெறக் கூடிய முறையில் குறைந்த காலத்தில் பயிற்சிகள் பெற

**ஓர் அரிய சந்தர்ப்பம்**

★ றிவைண்டிங்

மின் மோட்டார், மின் விசிறி, ரான்ஸ்போமர் மற்றும் மின்சார உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல், ஆரம்பத்தில் இருந்து பயிற்சி அளிக்கப்படும்.

காலம் 4 மாதம்

★ றேடியோ, T.V, வீடியோ, டெக் றிப்பெயறிங்

சகல றேடியோ, ரலிவிஷன் வீடியோ டெக் தொழிற்பாடு, திருத்துதல் ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும்.

காலம் 5 மாதம்

**புதிய வகுப்பு**

**ஆரம்பம்: 09 - 06 - 95**

10a m. Sat. Sun.

**WEEK DAY**

விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

சிறுப்பிட்டி வடக்கு, சிறுப்பிட்டி.

(சி/1441)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20-02-1957 உதிர்வு: 19-05-1994

திருமதி

**நவமலர் கந்தசாமி (மலர்)**

திதி: 07-06-1995

வழி சொன்ன தெய்வம் தான் நீங்கள் - போன
வழி சொல்ல வில்லை
வழி பார்த்து ஏங்கும் நீங்கள் - போன
வழி பார்த்து நாளும்
அழியாத உங்கள் நினைவோ
ஒழியாது நமை விட்டு
வழி யேதும் உண்டோ உமை
வர வழைக்க இப் புவியில்
ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

நாளை07-06-1995 புதன் நண்பகல் 12மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் திதியிலும், அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் ...றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் உ... கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள் ...கலந்து ...றோம். ...ளுகி...

குடும்ப...த்தினர்

''மலர் பவனம்''
காளி கோவிலடி,
சங்கானை.

(36954)

## 6-ம் ஆண்...டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 – 10 – 1971

வீர மரணம்: 06 – 06 – 1989

அமரர்

**ஏரம்பமூர்த்தி விஜயமூர்த்தி**

(ராஜன் / விசு)

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே!
நீ இல்லாத துன்பம் பெருகுதே!!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்பு அப்பா, அம்மா,
அண்ணன்மார், அக்காமார்,
மைத்துனர்கள், மருமக்கள்,
மற்றும் உறவினர்.

விநாயக முதலியர் வீதி,
பருத்தித்துறை.

(36729)

## நோயாளர் பதிவு நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கான கப்பல் சேவை மறு அறிவித்தல் வரை நடைபெற மாட்டாது என்றும் —

எனவே பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நோயாளர்களை பதிவு செய்வது இடை நிறுத்தப்பட்டிருப்பதாகவும் யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## கல்முனையில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூன் 6

கல்முனைக்கு அருகே பாண்டிருப்பு பகுதியைச் சேர்ந்த எஸ். திருநாவுக்கரசு (வயது 47) என்பவர் கடந்த வியாழன் இரவு இனந் தெரியாதோரால் சுட்டுக் கொலப்பட்டார்.

வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த இவரை அழைத்துச் சென்ற இளைஞர்கள் சிலர் காளி கோவில் பின் வீதியில் வைத்து சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

உ

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களம் நிறை யுவ வருடம் வைகாசி மாதம் உத்தர நட்சத்திரம் கூடிய சுபதினம் 24 ஆம் நாள் [07-06-1995] புதன்கிழமை மாலை 5 40 மணி முதல் 7 22 மணிவரை அமைந்த விருச்சிக லக்கின சுபமுகூர்த்த வேளையில்

பன்னாலை, தெல்லிப்பழை திரு. வை. பொன்னையா அவர்களின் புத்திரன் **ஜெகநாதன்** அவர்கட்கும்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு புன்னாலைக்கட்டுவன் திரு. திருமதி அரசரத்தினம் தம்பதிகளின் புத்திரி **மீனலோசனி** அவர்கட்கும்

விம்பிள்டன் ஸ்ரீகணபதி ஆலயத்தில் [Sri Ganapathy Temple, 123 - 133 Effra Road, Wimbledon, S.W. 19, U.K.] திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**Mr. & Mrs Kuganeyan,**
58, Byton Road,
Tooting,
London S.W. 17 9 H J.

**Mr. A. Vasuthevan,**
**Mr. & Mrs Manoharan,**
106, Lyon Park Avenue,
Wembley,
Middlesex H A.O 4 E Y.

[36951]

# தமிழீழ மாணவர் எழுச்சி நாள்

# யூன் - 6

**வாழ்த்துச் செய்தி**

மனித வளத்தில் மாணாக்கர் வளமே
புனிதமானது! போற்றுதற்குரியது!

வாழ்த்துவோர்:
**சிவா ரேடிங் கோ.**
சாவகச்சேரி

(சி/1659)

# தமிழீழ மாணவர் எழுச்சி நாள் யூன் - 6

**வாழ்த்துச் செய்தி**

விடுதலை வேட்கையை ஒருதலையாக
பெருகிடும் எழுச்சியில் பேரணி திரள்க

வாழ்த்துவோர்: **சிறி விக்னேஸ்வரா களஞ்சியம்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-1451)

# தமிழீழ மாணவர் எழுச்சி நாள் யூன் - 6

**வாழ்த்துச் செய்தி**

மாணாக்கர் நாம் மகிமை படைப்போம்
வீணாய் பொழுதை இனியும் கழியோம்!

வாழ்த்துபவர்: குகன் வைத்தியர், சுன்னாகம்.

(சி-1654)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ_தயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சமாதானக் கதவு மூடப்பட்டது!

விடுதலைப்புலிகளுடன் இனிமேல் பேச்சுவார்த்தை நடத்துவதாயின் அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும். அதாவது விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டுமே அரசாங்கம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தமுடியும்.

இவ்வாறு தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும். அதற்காகச் சமாதானப் பேச்சுக்கள் நடத்தப்படும் என்று நாடாளுமன்றத் தேர்தல் காலம் தொடக்கம் இதுவரை அவர் கூறிவந்தது வெறும் ஏமாற்று பூதிதங்களே என்பதனை அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்; வெளிக்காட்டியிருக்கிறார்.

தமிழர் பிரச்சினையில் இரு பக்கங்களிலும் தலையாரிகளாக விளங்குபவர்கள் அரசாங்கத்தினரும் விடுதலைப் புலிகளுமே ஆவர். இதனைச் சந்திரிகா மறுத்தாலும் யதார்த்தம் இதுவே தான்.

ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேசியோ, அல்லது ஏனைய சிங்களக் கட்சிகளுடன் சேர்ந்தோ ஜனாதிபதி ஒரு தீர்வைக் கொண்டு வந்தாலுங்கூட அது நடைமுறைக்கு வரமுடியாது.

எனவே விடுதலைப் புலிகளை ஓரங்கட்டிவிட்டு, தமிழர் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்று நினைப்பது இமாலயத் தவறு.

ராஜீவ் காந்தி முதற்கொண்டு ஜே. ஆர்., பிரேமதாசா, விஜேதுங்கா வரை கடந்த எட்டு வருடங்களாக இந்த அணுகுமுறையைக் கையாண்டு தோல்வி கண்டார்கள் என்பதனை சந்திரிகா புரிந்துகொள்ளத் தவறியமை அவரது அரசியல் ஞான சூனியத்தையே காட்டுகிறது.

பிரதமராகப் பதவியேற்ற புதிதில் அவர் பழைய நிகழ்வுகளில் இருந்து உரிய முறையில் அரசியல் பாடம் படித்திருப்பவர் போலவே தோற்றமளித்தார், அது வெறும் நடிப்பு அல்லது பகட்டுத்தனம் என்பது இப்போது புலனாகிறது அல்லவா?!

விடுதலைப்புலிகளின் பலமே—தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கான ஜீவனே—ஆயுதங்கள் தான். அவற்றைக் கைவிட்டால் அடுத்த கணமே சிங்களப் பேரினவாதம் தமிழர்களைக் கொன்று குவித்து, மேலும் சிறுபான்மையினராக்கி அடிமைகளாக்கி விடும்—இரண்டாந்தரப் பிரசைகளாக்கி விடும்.

எனவே ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டுப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப்புலிகளுக்கு நிபந்தனை விதிப்பது அரிசி இல்லாமல் சோறு சமைப்போம் வாருங்கள் என்று கூறுவது போலாகும்!

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், சமாதானத்தை உருவாக்குவதற்கும் மக்கள் ஆணை பெற்று வந்த சந்திரிகாவும்—

பழைய குருடி கதவைத் திறவடி என்று ஐக்கிய தேசியக் கட்சியின்—ரஞ்சன் விஜேரத்னாவின்—டி. பி. விஜேதுங்காவின்—நிலைப்பாட்டுக்கே வந்திருக்கிறார்! இதற்காக ஓர் ஆட்சி மாற்றமும், 62 சதவீத பெரும்பான்மையும் தேவை தானா?

விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு நிபந்தனை விதிப்பதானால், சந்திரிகா தமது படைகளையும் ஆயுதங்களைக் கீழே வைக்க உத்தரவிட வேண்டும். செய்வாரா?

இருதரப்புகளினதும் பலத்தை அளக்கும் அளவுமானி ஆயுத வலிமையாக—இராணுவ வலிமையாக—இருக்கும்போது, ஒரு தரப்பை மட்டும் ஆயுதங்களைக் கீழே வைக்கக் கேட்பது என்ன நியாயம்?

மொத்தத்தில் சந்திரிகா அம்மையார், சமாதானக் கதவுகளை இழுத்துப் பூட்டிவிட்டு, போர் மூலம் தீர்வு காணப் புறப்பட்டு விட்டார். இதற்கு மேல் இந்த நாட்டில் பிணங்களைப் புசிக்கக் கழுகுகள் பறக்குமே அன்றி சமாதான வெண்புறாக்கள் செத்து மடிந்து விடும்!

# 26 ஆயிரம் இராணுவத்தினருக்கு மீண்டும் வேலை வழங்க அரசு முடிவு

## தப்பி ஓடியதற்கு தண்டனை ஏதும் இல்லை

கொழும்பு, ஜூன் 6

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களில் சுமார் 26 ஆயிரம் பேருக்கு மீண்டும் வேலை வாய்ப்பை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இவ்வாறு மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் மீது ஒழுக்காற்று விசாரணை நடைபெறும் எனவும், ஆனால் அவர்களுக்கு தண்டனை எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டது.

தற்போதைய போரில் அடுத்தடுத்து படையினர் சந்தித்து வரும் பெரும் பின்னடைவுகளைச் சரி செய்யவும் அன்றாடம் கொல்லப்படும் படையினரின் எண்ணிக்கையை ஈடுசெய்யவுமே இந்த அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அத்துடன் பெரும் எடுப்பில் வடபகுதி மீது மேற்கொள்ள அரசினால் உத்தேசிக்கப்பட்டுள்ள படை எடுப்பிற்கான முஸ்தீபு நடவடிக்கையாகவும் இது கருதப்படுகிறது.

ஓய்வு பெற்றுச் சென்றுள்ள இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு மீண்டும் அவர்களை அரச பதவியில் அமர்த்தி வருவதும் குறிப்பிடத்தக்கது (ஒ 5)

# காலி வன்செயல் பின்னணி குறித்து ஆராய விசாரணைக்குழு நியமனம்

கொழும்பு, ஜூன் 6

கடந்த வெள்ளியன்று, காலியில் தமிழர்களின் கடைகள் எரித்து நாசமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழு, இச் சம்பவம் நடைபெற்றதற்கான பின்னணி பற்றி ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இரகசிய பொலீஸ் குழு ஒன்றும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில், திம்புளாகலையில், சீலாலங்கார தேரர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாகவே காலியில் கடைகள் எரிக்கப்பட்டன.

இனக்கலவரங்களை தூண்ட முனையும், எதிர்க் கட்சியினரின் நடவடிக்கையே இது என்று ஜனாதிபதியும் குற்றம் சாட்டி இருந்தார்.

இந்த நிலையில், பதற்றம் நிலவும் திம்புளாகலை பிரதேசத்திற்கு மேலதிக இராணுவ அணிகள் ஆனுப்பப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன, [ஒ-5]

# கொழும்பு மாநகரசபையில் ஜனாதிபதிக்கு எதிராக பிரேரணை

## பதில் மேயர் இடை நிறுத்தி வைத்தார்

கொழும்பு, ஜூன் 6

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவுக்கு எதிரான பிரேரணை ஒன்று கடந்த புதன்கிழமை கொழும்பு மாநகர சபையில் கொண்டுவரப்பட்டது.

அண்மையில் "இந்தியா ருடே" சஞ்சிகையில் முன்னாள் ஜனாதிபதிகளான ஆர். பிரேமதாஸா, ஜே ஆர். ஜெயவர்த்தன ஆகியோரை அவமதித்துஇவர் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாகவே இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

ஐ தே. க. மாநகரசபை உறுப்பினர் அன்ரனி விஜேசேகர மேற்படி பிரேரணையைக் கொண்டுவந்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து சபையில் பெரும் கூச்சல் ஏற்பட்டது.

கொழும்பு மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் ஆனந்த பிரேமசிங்க, நாட்டின் தலைவர் ஒருவருக்கு எதிராக மாநகரசபையில் பிரேரணை கொண்டுவர அரசமைப்பு இடம்தரவில்லை எனக் குறிப்பிட்டார்.

இதனை அடுத்து மேற்படி பிரேரணையை இடைநிறுத்தி வைத்த மாநகர பதில் மேயர் கே. கணேசலிங்கம், சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்ட பின்னர் அப் பிரேரணை தொடர்பாக பரிசீலிக்கப்படும் என தெரிவித்தார். [ஒ-14]

# கிருமி அகற்றும் சேவை ஆஸ்பத்திரியில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். போதனாசாலையின் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான கிருமி அகற்றும் சேவை கடந்த சனிக்கிழமை முதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்று வருகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட மின்சார வழங்கலை அடுத்தே இப்பிரிவு சேவைக்குறைப்பை மேற் கொண்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இரவு பகலாக சேவையில் இருந்து வந்த இப்பிரிவுக்கு இப்போது இரவு நேர மின் துண்டிப்புடன் பகலிலும் 2 மணித்தியாலங்கள் மட்டுமே மின்சாரம் வழங்கப்படுகின்றது.

இதன் காரணமாக, சகல பிரிவுகளுக்கும் அவசியமான, உபகரணங்கள் மற்றும் நாளாந்த பாவனைப் பொருள்களை போதியளவுக்கு கிருமி அகற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் அதே வேளை, சிகிச்சை வழங்கும் வைத்தியர்களுக்கும் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.

### பல்கலைக் கழகங்களுக்கு

# 94-95 ஆம் கல்வி ஆண்டுக்கு மேலும் சில மாணவர்கள்

## விசேட ஏற்பாட்டில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 6

1994 — 95 ஆம் கல்வி ஆண்டுக்கு பல்கலைக் கழகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான இடங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

வயது முதிர்ந்தோர் கண்பார்வை அற்றவர்கள், படிப்பு தவிர்ந்த பிறதுறைகளில் திறமை வாய்ந்தோர், வலது குறைந்தோர், முதல் நிலைப்பட்டப்படிப்புகள் படிக்க விரும்பும் பட்டதாரிகள் ஆகியோர் மேற்படி இடங்களுக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமைகளாக— 1993இல் நடந்த ஜி. சி. ஈ. உயர்தரப்பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். அல்லது—

1993இல் நடந்த உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட 3 பாடங்களில் சித்தியுடன் அதே அமர்வில் நான்காவது பாடத்தில் 25க்கு குறையாத புள்ளியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இவற்றுடன் 4பாடங்களுக்கும் 180க்கு குறையாத மொத்த திரட்டு புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இம் மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்

இவை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்ட பத்திரிகை விளம்பரம் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவம் என்பனவற்றை இலக்கம் 15 இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதியில் உள்ள 'உதயன்' விளம்பர பணிமனையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (ஐ)

# விவசாயிகள் மூவருக்கு இறப்புப் பணிக் கொடை

யாழ்ப்பாணம், ஜூன். 6

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் ஒய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து பின் இறந்த யாழ். மாவட்ட விவசாயிகளின் இறப்புப் பணிக்கொடைக்காக விண்ணப்பித்தவர்களில் மூவருக்கு கொடுப்பனவு இடைக்கப்பெற்றுள்ளது.

கரணவாய் இமக்கைச் சேர்ந்த க. செல்வராஜாவுக்கு 16 ஆயிரத்து 567 ரூபாவும், கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ந. சிவராஜாவுக்கு 16 ஆயிரத்து 196 ரூபாவும், தவிடைப்பைச் சேர்ந்த ந நடேசமூர்த்திக்கு 23 ஆயிரத்து 571 ரூபாவும் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் யாழ் மாவட்டக் காரியாலயத்திற்கு இடைக்கப் பெற்றுள்ளதாக கமத்தொழில் காப்புறுதிச் சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் அறிவித்தார். [ஒ-4]

### புலிகளின் குரல் வானொலியில்

செவ்வாய் இரவு 06 — 06 — 1995

- ★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 தமிழீழ மாணவர் எழுச்சி நாளை யொட்டி சிறப்பு நிகழ்ச்சி இயல்வாணன் எழுதிய— "மோதி மிதித்து விடுங்கள்"
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம்— இ. இராஜேஸ்வரன் எழுதிய "சொல்லும் செயலும்"
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

07 — 06 — 1995
புதன் காலை

- ★ 7-02 —மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — மத்திகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலியில்

செவ்வாய் மாலை

- ★ 5-00 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மதியூகம்
- ★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு

# புதிய தேர் வெள்ளோட்டம்

வட்டுக்கோட்டை மேற்கு சின்னக்கதிர்காமம் புதிய அலங்காரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

புதிய தேர் அன்றையதினம் பி. ப. 2. 15 மணிக்கு வெள்ளோட்டம் விடப்படும்.

தேர் மகத்துவம் பற்றிய சிறப்புரைகள், சங்கீத பூஷணம் எஸ். குமாரசாமியின் இசை விருந்து, விசேட மேளக்கச்சேரி என்பன வெள்ளோட்ட விழாவில் இடம் பெறும்.

மேற்படி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை, ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தேர்த் திருவிழா இம் மாதம் 10 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் அடுத்த நாளும் நிகழவுள்ளன. [அ]

# மேலும் ஐவர் ஒய்வூதியம் பெறத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 6

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் விவசாயிகள் ஒய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து ஒய்வூதியம் பெற்றுவரும் 55 யாழ். மாவட்ட விவசாயிகளுடன் ஏப்ரல் மாதத்தில் இருந்து மேலும் 5 விவசாயிகள் ஒய்வூதியம் பெறத்தகுதி பெற்றுள்ளனர்.

திரு. சி. குலசேகரம்- பருத்தித்துறை, திரு. கு. கணபதிப்பிள்ளை - அரியாலை, திரு. க. விக்கினராஜா - சுன்னாகம் தெற்கு, திரு. த. கனகசபை - கோண்டாவில், திரு. க. வடிவேலு - கரணவாய் வடக்கு ஆகிய 5 விவசாயிகளுமே புதிதாக ஒய்வூதியம் பெறத் தகுதி பெற்றுள்ளனர் என கமத்தொழில் காப்புறுதிச் சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-4)

# பௌத்த பாதுகாப்பு நிதியம்

கொழும்பு, ஜூன் 6

பௌத்த மதத்தை பாதுகாப்பதற்காகவும், பௌத்தர்களின் நல மேம்பாட்டுக்கு உழைக்கவும் என "பௌத்த பாதுகாப்பு நிதியம்" ஒன்று மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாம்.

இந்த நிதியம் எதிர்வரும் எசலபெரஹறா அன்று கண்டியில் ஆரம்பிக்கப்படும் என்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகை தியவதன நிலமே நிரந்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ஒ-5)

# மருத்துவ அதிகாரிகள் பரீட்சை

கொழும்பு, ஜூன் 6

மருத்துவ அதிகாரிகள் [ஆரம்ப தரம்] பல் வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்கான அரையாண்டு பரீட்சை ஜூலை மாதம் 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, கண்டி, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இதற்கான பரீட்சை நிலையங்கள் அமையும்.

எழுத்து, வாய்மூல பரீட்சைகளை உள்ளடக்கிய இத் தேர்வு மும்மொழிகளிலும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

# கணக்காய்வு அத்தியட்சகர்கள்

கொழும்பு, ஜூன் 6

இலங்கை கணக்காய்வாளர் சேவையின் வகுப்பு - 11கணக்காய்வு அத்தியட்சகர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன,

இதற்கான போட்டிப் பரீட்சை ஜூலை மாதம் 21ஆம் திகதி நடத்தப்படஉள்ளது.

இது தொடர்பான விவரங்கள் மே மாதம் 19ஆம் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. [ஒ-14]

### போர் அனர்த்தங்களின் மத்தியிலும்

# மாணவரின் சாதனைகள் போற்றுதற்கு உரியவை

## கல்வி மேம். பேரவை செய்தி

யாழ்ப்பாணம், ஜூன் 6

எமது பிரதேசத்தில் கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் போர் அனர்த்தங்களின் மத்தியிலும் எமது மாணாக்கர்கள் உறுதியும் விடாமுயற்சியும் கொண்டு கல்வியைத் தொடர்ந்து தேர்வுகளிலும், பாடசாலைப் புறகருமங்களிலும் சாதனைகளை நிலைநாட்டிவருவது போற்றுதற்குரியதாகும்.

மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழீழ கல்வி மேம்பாட்டுப்பேரவை வெளியிட்டுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பாடசாலைகள் பல சிதைந்து போயுள்ளன. இன்னும் பல இடம்பெயர்ந்துள்ளன; மாணவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்; பொருளாதாரத் தடைகளினால் கற்பித்தற் சாதனங்களும், பௌதிக வளங்களும் குன்றியுள்ளன. ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறை பாரிய பிரச்சினையை உண்டாக்கி உள்ளது.

இந்த நிலையில் இங்குள்ள வளங்களின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுத் தனித்தும் ஒருமித்தும் கல்வியிற் கருத்தூன்றி நின்று பல சவால்களையும் எதிர்கொண்டு மாணவர்கள் கல்வித்துறையில் எழுச்சி பெற்று வருகின்றனர்.

எதிர்வரும் காலம் இன்னும் துன்பமான காலமாக மாறினாலும்; மாணவர்கள் கல்வி அறிவைப் பெறுவதில் - ஊக்கம் தளராது உற்சாகத்தோடு — செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றோம் — என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

# விடுதலையில் தம் பங்குபற்றி மாணவர் உணர வேண்டும்

## பல்கலை. மாணவர் அறிக்கை

சுதந்திரத்திற்காக ஸ்ரீலங்கா அரசின் சகல அடக்கு முறைகளுக்கும் எதிராக தமிழீழ மக்கள் போராடும் இவ்வேளையில், மாணவர்களாகிய நாம் எமது விடுதலைக்கு செய்யக்கூடிய பங்களிப்பு என்ன என்பது பற்றி உணர வேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள "மாணவர் எழுச்சி நாள்" அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாட்டினை சகல வழிகளிலும் கட்டி எழுப்புபவர்கள் மாணவர்களே. மாணவர் சமூகம் தமது பொறுப்புகளையும், கடமைகளையும் உணர்ந்து நாட்டின் அபிவிருத்தியில் தங்களது பணி என்ன என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசு, தமிழீழ மக்களை ஒடுக்கும்போது, அதில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே.

சிரமங்களின் மத்தியில் படித்து சித்தியடைந்தாலும், பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி மூலம் தடை செய்யப்படுகிறது.

தவிர, போர்க்கால நிலைமைகளால் மனநிறைவுடன் கல்வி கற்க முடியாது, உளரீதியான தாக்கங்களுக்கும் எமது மாணவர்கள் உள்ளாகியுள்ளனர்.

தற்போது நாம் கற்கும் கல்வியும் எமக்கு பிரயோசனமற்ற கல்வியே.

எமது இனத்தின் வரலாற்றை அறியமுடியாத எமது தேசத்தின் வளங்களை இனங்கண்டு பயன்படுத்த முடியாத வகையில் அமைந்த. கல்வியே தற்போதைய அரசினால் எமக்கு வழங்கப்படுகிறது.

எமது மண்ணில் சுதந்திரமாக நடமாடவும் எமது தேசத்தின் வரலாற்றினையும் வளங்களையும் கண்டு கொள்ளவும் சமூகச் சூழலுக்கு ஏற்றவாறு அறிவியல் ரீதியான வளர்ச்சியினை பெறவும் ஏற்ற வகையில் — சுதந்திரத்தையும் இறைமையையும் பிரதிபலிக்கக் கூடிய கல்விக் கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

தமிழீழ மாணவராகிய நாம் இவற்றிற்காகவும், தேசத்தின் விடுதலைக்கு தடையாக இருக்கும் சக்திகளுக்கு எதிராகவும், எமது தடைகளை அகற்ற வேண்டியவர்கள் நாமே என்ற உண்மையை உணர்ந்து தாயக மீட்புப் பாதையில் பங்கெடுப்போம்.

# திருமறைக் கலாமன்ற நாடக அரங்கு கண்காட்சி

குருநகர், ஜூன் 6

திருமறைக் கலாமன்றம் இம்மாதம் 15, 16, 17, 18 ஆம் திகதிகளில் தொடர்ந்து 4 தினங்கள் நாடக அரங்கியற் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

கிரேக்கம், ரோமாபுரி நாடகங்கள், சேக்ஸ்பியர் கால நாடகங்கள், 18 ஆம் 19,ஆம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள், இந்திய, யப்பான் சீன நாடகங்கள் முதலியவை பற்றிய புகைப்படங்கள், நூல்கள், ஓவியங்கள், மாதிரி அமைப்புகள் இக் கண்காட்சியில் பார்வைக்கு இருக்கும்.

இக் கண்காட்சியில் 15 ஆம் 16 ஆம் திகதிகள் மாணவர்களுக்கென விசேஷமாக ஒதுக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்படுகிறது. (க-51)

## எழுச்சி கொள்ளடா!

காலமெல்லாம் நீ அழுது பெற்றிடும்
கல்வியினை நீ காவல் செய்யடா
ஈழ மண்ணில் நீ ஆவல் கொள்ளடா
இளையவனே நீ எழுந்து நில்லடா

வேளையெல்லாம் விழித்திருங்கள் - உங்கள்
வித்தைகளை அழிக்கின்ற
கோழைகளின் கொடுமைகளை
கொளுத்தி எரித்திடுங்கள்

— காரை எம். பி. அருளானந்தன்

## உன்னுள் தேடுது உலகம்!

அடக்க முனைபவன் அடங்கிட உன்மனத்
திடமும் அறிவும் திறந்திட வேண்டும்
இடக்குது நமக்கெனென் றிட்டுண்டிருந்தால்
படிப்பது தேசப் பயனுக்கென் செய்யும்?

இன்னலில் நொருங்கிடும் இன்றைய உலகம்
உன்னுள் மனிதனைத் தேடுது அதனால்
மின்னல் இடிபுய லாகிடு மழையாய்
மண்ணும் தழைக்கத் தூறிடு; தோள்கொடு!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## நாண வைப்போம்!

வளருகின்ற சமுதாயம் வளமாக வாழ்ந்திடவே
இளவயதில் ஏற்றகல்வி இதமாகப் பெற்றிடவே
தளராமல் தன்காலில் தலைநிமிர்ந்து நின்றிடவே
உளமாரச் சிந்தித்து உயர்கல்வி பெறுவோமே

மாணவர்நாம் மாநிலத்தில் மாண்புடனே வாழ்ந்திடவே
காணவரும் தமிழீழம் காலமெலாம் ஓங்கிடவே
ஆணவத்தோ டெம்மையிங்கே ஆட்டுகின்ற கூட்டமதை
நாண வைப்போம் நாம்கூடி யூன் ஆறு நாளின்று!

— வ. யோகானந்தசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை நல்லையா
(உள்நாட்டு இறைவரித்திணைக்களம்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தை சம்டன் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நல்லையா (உள்நாட்டு இறைவரித்திணைக்களம்) கொழும்பில் காலமானார்.

இவர் முன்னாள் இணுவில் கிராம சேவையாளர் கணபதிப்பிள்ளை (இராசா விதானையார்) - இரத்தினம்மா ஆகியோரின் மகனும், கமலாவின் அன்புக் கணவரும், அனுஷா [அமெரிக்கா], கிரிஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலனின் (பொறியியலாளர் அமெரிக்கா) அன்பு மாமனும், ஈசனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற K. P. செல்லையா [இராசா அரிசி ஆலை - கொக்குவில்], அன்னப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், அன்னலட்சுமி, காசிநாதன், அருந்தவமலர் - சுப்பிரமணியசிவம், சுசீலாதேவி - தர்மலிங்கம், ஞானகலாராணி, சரவணபவன், சர்வானந்தன் (மோகன்], ஆகியோரின், அன்புச்சகோதரனும், புவனராணி - தர்மரத்தினம், கிக்கினராசா, ரஞ்சிதம் - தட்சணாமூர்த்தி, லீலாவதி - பத்மநாதன், சாந்தாதேவி - கிருஷ்ணமூர்த்தி, லலிதா - சத்தியமூர்த்தி, செல்வரத்தினம், பத்மினி - யோகராசா, கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், திருமகள் - சரவணபவன், சாந்தி - சர்வானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

தகனக்கிரியைகள் இன்று (6-6-95) கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. சுப்பிரமணியசிவம்
(மைத்துனர்)

துரை வீதி,
இணுவில்.
[36952]

## சிவப்பிரகாசம் வைகுந்தநாதன்
[Retired Manager, Govt Rice Mill]

சவனாய், புலோலி கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த சி. வைகுந்தநாதன் 31-05-1995இல் அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் தங்கரத்தினத்தின் (அவுஸ்திரேலியா) அன்புக் கணவரும், புஸ்பராணி (அவுஸ்திரேலியா), ரகுநாதன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), சிவாயினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனுமாவர். ஈமக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன.

நண்பர்கள், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சோமசேகரம்.
(மைத்துனர்

கோத்திரம் பற்றை,
தம்பளை,
பருத்தித்துறை.
(36946)

## முருகேசு சுந்தரலிங்கம்
(வேலணை மேற்கு, வேலணை - 7)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்புத்துறை மேற்கை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமான முருகேசு சுந்தரலிங்கம் 4 - 6 - 95 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான நாகராசா - சவுந்தரம் தம்பதிகளின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகரெத்தினம் (மண்கும்பான்), காலஞ்சென்ற சிவலிங்கம் (வேலணை) ஆகியோரின் சகோதரரும், பாக்கியலெட்சுமி, சண்முகம், கணேசலிங்கம், முத்துலிங்கம், மாணிக்கவாசகர், பஞ்சலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், சந்திரா, சதானந்தன், சித்திரா, சிவானந்தன், சுதேந்திரா, சுதானந்தன், சரசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீசந்தராஜாவின் (விநாயகர் ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி) மாமனாரும், கீர்த்திகாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
க. சதானந்தன் (ராசன்)
(மகன்)

84/2, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(36955)

## திருமதி தருமலிங்கம் நாகரட்ணம்

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது மானிப்பாயில் வசித்தவருமாகிய தருமலிங்கம் நாகரட்ணம் 4-6-95 பிற்பகல் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அரசாங்க ஒப்பந்தக்காரராகிய கந்தையா தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், ஞானலிங்கம் [காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவர்], லிங்கவதி, ஜெயலிங்கம் [கனடா), பரதலிங்கம், தர்யாவதி [கனடா), யோகலிங்கம் (நோர்வே), தர்மரட்ணம் (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும், சகுந்தலாதேவி, நல்லைநாதன், அகிலா (கனடா], சண்முகராசா, புவனேஸ்வரி, (நோர்வே] குணேஸ்வரி ஆகியோரின் அருமை மாமியாரும், பாக்கியவதி, சரஸ்வதி, இந்திராணி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் விக்னராஜா, சிவராஜா ஆகியோரின் மைத்துனியும், பாலகுமார் [நோர்வே), பாலறஞ்சினி, விஜிதா [சட்டக் கல்லூரி மாணவி]. ராமகிருஷ்ணன் (இத்தாலி). லீலராஜிகா (அமெரிக்கா), கோபிகிருஷ்ணா (வைத்தியர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), வாசுகி, ஸ்ரீகரி, கவிதா [கனடா], உஷா (நோர்வே), சாத்விகன் ஆகியோரது பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் மானிப்பாய் வடக்கில் உள்ள மைத்துனர் இல்லத்தில் நடைபெற்று (7-6-95) நாளை புதன்கிழமை பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 9 மணியளவில் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்,

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. வரதராசா
[மைத்துனர்)

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.
[36957]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 06 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

## மாணவர்கள் தமது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும் என்பதும் தெள்ளென விளங்கும்.

தேசியத் தலைவரினால் வலுவூட்டப்பட்டு மாவீரர்களினால் திடமூட்டப்பட்டு நிற்கும் தமிழீழத் தேசியத்திற்கு மேலும் உரமூட்ட வேண்டியது இன்றைய தமிழர்களின் கடமையாகும். அதிலும் நாட்டின் முதுகெலும்பாகக் கருதப்படும் இளவயதினர் பெரும்பாலும் மாணவர்களாகவே இருப்பதால் கடப்பாட்டில் பெரும் பங்கு மாணவர்களுக்கே உரியதாகிறது.

''எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ளவேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவு ஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலை வல்லுநர்களாக, நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்றவேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக ஆட்சியாளர்களாக, உருப்பெறவேண்டும்'' என்ற தேசியத் தலைவரின் கனவை நனவாக்கும் பெரும் பொறுப்பும் மாணவரிடமே உள்ளது என்பதையும் மாணவர் எழுச்சி நாளில் உளமிருத்தி உழைப்போம். —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

## செல்வி தனுஷா கனேந்திரன்

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவரும், சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் ஊழியருமான திரு. அருளானந்தன் கனேந்திரன் அவர்களின் அன்புப் புதல்வி க. தனுஷா அவர்கள் 1995 - 05 - 07 ம் திகதி சிவபதம் அடைந்தமையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எங்கள் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர்,
நலன்புரி சங்கம்.

பிரதேச செயலகம்,
சாவகச்சேரி.
02 - 06 - 95.
[சி-1296]

# 6 ஆம் ஆண்டு நினைவு

மங்கள மலர்வு: 13 — 07 — 1920



விண்ணக விரைவு: 06 — 06 — 1989

## பஸ்ரியாம்பிள்ளை 'அல்வின்
[இ. போ. ச. ஊழியர்]

பாசமுடன் எங்களுடன் வாழ்ந்த நீங்கள்
பாதியிலே எம்மைவிட்டு பிரிந்ததேனோ
ஆசையுடன் உங்கள் முகம் பார்க்க
ஆவலுடன் ஏங்கித் தவிக்கிறோமையா!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

சென் செபஸ்தியன் வீதி, குருநகர். [8573]

# 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



அச்சுவேலியில் அரசபடையோடு ஏற்பட்ட
நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

## லெப். க. நவநிதி (பவான்)

தாயின் மடியில்: 23 — 04 — 1966
வீரமண்ணில்: 06 — 06 — 1987

கூலிப்படைகள் கூவென்றோடிட
குண்டுகள் தீர்த்த இளம்புலி நவநிதி
சிறிப்பாயும் சீற்றம் கொண்டுமே
மாற்றான் படையை சல்லடை போட்டவன்
ஊற்றாய் வீர உணர்வுகள் நிரம்பிய
மேஜர் அல்பேட்டின் சகோதரன் இவனோ
வேகம் குறையா வீறுகொள் வேங்கை
மோகத் தமிழில் தாகம் கொண்டவன்
பாவம் தேடும் பாதகப் படையினர்
மறைவினில் ஏவிய மாயக் குண்டினை
மார்பினில் ஏற்று மரபினைக் காத்த
தியாகியின் ஆத்மா சாந்தி கொண்டிடவே
ஈழம் மீட்கும் சக்தியாய் மாறுவோம்.

உன் பிரிவால் வாடும்,
பெற்றோர், சகோதரர்கள்,
அண்ணிமார், உறவினர்கள், நண்பர்கள்,

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
[36955]

## தந்திரிமலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
முகாமைத் தங்கள் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த விடுதலைப் புலிகள் பின்னர் அதனை முற்றாக அழித்தனர்.

முகாமில் இருந்து ஆயுத உபகரணங்கள் பலவற்றைப் புலிகள் கைப்பற்றினர். அவற்றின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ரீ 56- 2 ரக துப்பாக்கி | — | 01 |
| ★ ரீ 56-1 ரக துப்பாக்கி | — | 01 |
| ★ நடுத்தர ரவை | — | 1,015 |
| ★ நடுத்தர காஸ் ரவை | — | 25 |
| ★ 9 மி.மீ. ரவை | — | 131 |
| ★ ஏ.கே. மகஸின் | — | 30 |
| ★ கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவி | — | 03 |
| ★ கிரனேட் | — | 03 |
| ★ ஏ.கே. ஹோல்ஸர் | — | 03 |
| ★ பைகள் | — | 16 |
| ★ வயர் றோல் | — | 02 |
| ★ தண்ணீர் கான் | — | 13 |
| ★ சாப்பாட்டுப்பெட்டி | — | 07 |
| ★ ரீ.வி. | — | 01 |
| ★ இராணுவ இடுப்புப்பட்டி | — | 20 |
| ★ தலைக்கவசம் | — | 14 |
| ★ இராணுவ சீருடை | — | 47 |
| ★ பச்சைநிற சேட் | — | 35 |
| ★ கிளைமோர் ஹோல்ஸர் | — | 01 |
| ★ மழைக்கவசம் | — | 12 |
| ★ உருமறைப்பு சேட் | — | 10 |
| ★ உருமறைப்பு காற்சட்டை | — | 09 |
| ★ உருமறைப்பு 'ரீ'-சேட் | — | 07 |
| ★ ஜக்கற் | — | 09 |
| ★ சப்பாத்து | — | 39 சோடி |
| ★ ஹென்ரர் சப்பாத்து | — | 11 சோடி |
| ★ தொப்பிகள் | — | 13 |
| ★ மின் அழுத்தி | — | 01 |
| ★ 60 அம்பியர் பற்றி | — | 01 |
| ★ 90 அம்பியர் பற்றி | — | 01 |
| ★ 'கஸற்' றெக்கோடர் | — | 02 |
| ★ பணம் | — | 960 ரூபா |

## வன்னியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இராணுவத்தின் உத்தேச திட்டம் குறித்து தெளிவான தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

எனினும் —

பூவரசங்குளம் ஊடாக மன்னார் வீதியையோ அல்லது—

தாண்டிக்குளம் ஊடாக யாழ். வீதியையோ அல்லது—

அண்மையில் புலிகளின் பல தாக்குதல்கள் இடம்பெற்ற ஹொறவப்பொத்தானை ஊடான திருகோணமலை வீதியையோ அல்லது —

பூவரசங்குளம், மடு, விடத்தல்தீவு ஊடாக பூநகரி வரை முன்னேறுவதையோ—

இலக்கு வைத்து இராணுவம் முன்னேற முயற்சிக்கக் கூடும் என ஊகம் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் பதற்றம்

இராணுவ முஸ்தீபுகளை அடுத்து — இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத — வன்னியின் எல்லைப் புறப் பகுதிகளில் உள்ள மக்கள் பதற்றமடைந்துள்ளனர்.

நாம்பன்குளம், ஓமந்தை, நம்பைக்குளம், சேமமடு, விளக்கு வைத்தகுளம், கொந்தக்காரன்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் தமது வீடுகள், கடைகளில் உள்ள பொருள்களை ஏற்றிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

புளியங்குளம், கனகராயன் குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் இரவு வேளைகளில் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கிவிட்டு வருகின்றனர்.

அண்மையில் தாண்டிக்குளம் ஊடாக வந்த பயணிகளுக்கு, தாண்டிக்குளத்தில் கடமையிலிருந்த தமிழ்ப்பெண் பொலிஸ் ஒருவர் இராணுவத்தின் முன்நகர்வு ஏற்பாடுகள் குறித்து ''அபாய அறிவிப்பு'' வெளியிட்டதாகவும்—

இதனைத் தொடர்ந்து அந்தப் பெண் பொலிஸாருடன் அப்பகுதியிலிருந்த இராணுவத்தினர் கடும் வாக்குவாதப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் பெருமளவு துருப்புகள் குவிக்கப்படுவதை அடுத்து வவுனியாப் பகுதியில் படையினரின் சோதனை நடவடிக்கைகளும் தீவிரமாக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது. (உ-9)

## உடப்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இவர்கள் தேசிய அடையாள அட்டைகளை வைத்திருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## தமிழீழ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
செய்து வைத்தார்.

தமிழீழ நிதித்துறையைச் சேர்ந்த ரஞ்சன் மாஸ்ரர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்ச்சியில் திரு. கரிகாலன் யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி ஆகியோர் சிறப்புரை யாற்றினர். [ஐ-4]

## யாழ். பெண்ணின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
யாழ். கச்சேரியடியைச் சேர்ந்த பெண் படையினரால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

இதற்கிடையில் —
பிரஸ்தாப பெண் தம்முடன் மறைத்து எடுத்துச் சென்றது மிதிவெடி என்று அரசு சார்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. [ஐ]

## செஞ்சிலுவைக்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி[
அவர் மேலும் குறிப்பிட்டதாக அறிவிக்கப்பட்டது.

வடக்குக்கு உணவுப் பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிப்பது என்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் நிலைப்பாட்டில் இதுவரை எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை என்று —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி மேரி பேர்கின் நேற்று மாலை தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## அம்பலவாணர் இராமலிங்கம்
(ஓய்வுபெற்ற யாழ் மத்திய கல்லூரி ஆசிரியர்)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீராவியடியை வசிப்பிடமாகவும், தற்பொழுது திருநெல்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டவரான அம்பலவாணர் இராமலிங்கம் நேற்றுக்காலமானார்.

இவர் காலஞ்சென்ற அம்பலவாணர் செல்லாச்சியின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் சகோதரரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (06 - 06 - 1995) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது வசிப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
க. குணநாயகம்.
(அமரா ரேடர்ஸ்)
78, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
(36947]

## காசிராசலிங்கம் ஞானலிங்கம்

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சித்தன்கேணியை வசிப்பிடமாகக் கொண்டவருமான காசிராசலிங்கம் ஞானலிங்கம் அவர்கள் 2 - 6 - 95 இல் வீரச்சாவடைந்தார்.

இவர் ஓய்வுபெற்ற தபாலதிபர் இ. காசிராசலிங்கத்தினதும் பரமேஸ்வரியினதும் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற பிரசித்த நொத்தாரிசும் முன்னாள் பண்டத்தரிப்பு பட்டின சபை தலைவருமான பண்டிதர் இ. இராமலிங்கம், க. விநாயகமூர்த்தி உடையார் ஆகியோரின் பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
பொ. கணபதிப்பிள்ளை
(மாமன் — மருந்தாளர்)

பிள்ளையார் கோவிலடி,
சித்தன்கேணி.
(36959)

## கனகசபை ஆறுமுகராசா
(சுங்கத் திணைக்களம் - கொழும்பு)

கனகசபை ஆறுமுகராசா அவர்கள் 3 - 6 - 95ல் கொழும்பில் காலமானார்.

இவர் தவமணிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசபை திருமதி செல்லம்மா தம்பதிகளின் மகனும், காட்டுக் கந்தோர் ஒழுங்கையைச் சேர்ந்த பொலீஸ் சார்ஜண்ட் காலஞ்சென்ற இரத்தினம் திருமதி அன்னலெட்சுமி தம்பதிகளின் மருமகனும், தர்ஷனன், சுதர்ஷனன், நிதர்ஷனன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சண்முகராசா (சுவிஸ்), சிவலிங்கராசா [பிரான்ஸ்), செல்வராசா, தேவராசா, செல்வமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 4 - 06 - 95 ல் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. செல்லம்மா
(தாய்)

32, சந்தனமாதா கோவில் லேன்,
சண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(36956]

## தம்பு தம்பிராசா
(ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்]

மீசாலையைப் பிறப்பிடமாகவும், கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தம்பிராசா நேற்று (5 - 6 - 95) திங்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் கணவரும், கோணேசமூர்த்தி [நெதர்லாந்து), சறோஜினிதேவி [யாழ். போதனா வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்], காலஞ்சென்ற மகாதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமணிதேவி, பாலசுந்தரம் [மக்கள் வங்கி யாழ்ப்பாணம்], ஆகியோரின் மாமனாரும், விதுபா [சுண்டிக்குளிமகளிர் கல்லூரி], நிரோத்தமன், சசிகரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [6-6-95] செவ்வாய்க்கிழமை 23, விக்ரோறியா வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல்மயானத்திற்குஎடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ. பாலசுந்தரம்
[மருமகன்)

23, விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம்.
[36958]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org